மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பல்லடம்
அ.வ.எண். 150/2009

பெயர் : லட்சுமி
சாட்சி – வா.சா–1 நாள்: 07.10.2025

---

**குறுக்கு விசாரணை (16, 17 மற்றும் 19 பிரதிவாதிகள் தரப்பு)**

1. எனது தாயார் உயிருடன் இருந்த காலத்திலேயே 2, 3, 4 பிரதிவாதிகளுக்கு திருமணம் நடைபெற்று விட்டது என்றால் சரிதான். அவர்களுக்கு திருமணம் ஆன பின்னரும், 2, 3, 4 பிரதிவாதிகள் தனித்தனியே தாவா 2 வது அயிட்ட சொத்தில் வசித்து வந்தார்கள் என்றால் சரிதான். அவர்கள் விவசாயம் செய்து, விசைத்தறி குடோன் நடத்தி வந்தார்கள் என்றால் சரிதான். தாவா 2 வது அயிட்ட சொத்தில் அவர்களுக்கு உள்ள பகுதியில் தனித்தனியாக விவசாயம் செய்து வந்தார்கள் என்றால் சரிதான்.

2. எனது தாயார் உயிருடன் இருந்த காலத்தில் 2 மற்றும் 3 பிரதிவாதிகள் பெயரில் தனித்தனியாக இரண்டு செட்டில்மெண்ட் ஆவணங்களும், 2 முதல் 5 பிரதிவாதிகள் பெயருக்கு ஒரு உயில் சாசனமும் எழுதி வைத்துள்ளார் என்றால் சரியல்ல. நான் சொல்வது தவறு என்றும், எனது தாயார் செட்டில்மெண்ட் ஆவணம் மற்றும் உயில் ஆவணம் எழுதி வைத்திருந்தார் என்றும், நான் வழக்கிற்காக இல்லை என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

3. உயில் மற்றும் செட்டில்மெண்ட் ஆவணங்களின்படி 2 முதல் 5 பிரதிவாதிகள் தான் அவர்களுக்கு பாத்தியப்பட்ட சொத்தில் சுவாதீனம் மற்றும் அனுபவத்தில் இருந்து வந்தார்கள் என்றால் சரியல்ல. பிரதிவாதிகளுக்கு ஏற்படுத்திக் கொடுக்கப்பட்ட ஆவணங்கள் சட்டப்படி செல்லத்தக்க ஆவணங்கள் என்றால் சரியல்ல. மேற்படி 2 முதல் 5 பிரதிவாதிகள் பெயருக்கு ஏற்படுத்தப்பட்ட ஆவணங்களின் அடிப்படையில் 16, 17 மற்றும் 19 பிரதிவாதிகள் பெயருக்கு ஏற்படுத்திக் கொடுத்துள்ள ஆவணங்களும் சட்டப்படி செல்லத்தக்க ஆவணங்கள் என்றால் சரியல்ல.

4. 16, 17 மற்றும் 19 பிரதிவாதிகள் கிரயம் பெற்ற சொத்தில் அவர்கள் தான் சுவாதீனம் மற்றும் அனுபவத்தில் இருந்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. 16, 17 மற்றும் 19 பிரதிவாதிகள் கிரயம் பெற்ற பின்னர் வருவாய் ஆவணங்களில் பெயர்

மாற்றம் செய்து அவர்கள் அனுபவம் செய்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. 16, 17 மற்றும் 19 பிரதிவாதிகள் உரிய மறுபயன் கொடுத்து கிரயம் பெற்ற நபர்கள் என்பதால் அவர்கள் தான் சொத்தின் உரிமையாளர்கள் என்றால் சரியல்ல.

5. 16, 17 மற்றும் 19 பிரதிவாதிகள் வாங்கியுள்ள சொத்தினை பொறுத்து பாகம் கேட்பதற்கு எனக்கு எந்த உரிமையும் கிடையாது என்றால் சரியல்ல. 16, 17 மற்றும் 19 பிரதிவாதிகள் சுவாதீனம் மற்றும் அனுபவத்தில் இருப்பதும், அவர்கள் சொத்தினை வாங்கிய விவரமும் எனக்கு நன்கு தெரியும் என்றும் அதை மறைத்து பொய்யாக நான் இந்த வழக்கில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**16, 17 மற்றும் 19 பிரதிவாதிகள் தரப்பில் 5, 22 மற்றும் 23 பிரதிவாதிகள் தரப்பில் ஏற்கனவே செய்துள்ள குறுக்கு விசாரணையையும், ஏற்றுக் கொள்வதாக தெரிவிக்கப்பட்டது.**

**25 மற்றும் 26 பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

V KALIDASAN

Digitally signed by V KALIDASAN
Date: 2025.10.07 18:03:58 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,

பல்லடம்.